# மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மனைலே!

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

“என் நம்பிக்கை இயேசுவின் இரத்தத்திலும் நீதியிலுமேயன்றி வேறெதிலும் கட்டப்பட்டிருக்கவில்லை.” அது ஒரு அற்புதமான பாடல் அல்லவா? “என் ஆத்துமா சுற்றிலும் சோர்ந்து போகும் போது, அவரே என் நம்பிக்கையும் உறைவிடமுமாயிருக்கிறார்.” பாருங்கள்? “கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல் நிற்கிறேன்.”

17. அந்தப் பண்டிதர்... அவருடைய பெயரை மறந்து விட்டேன்... சமீபத்தில் அவர் நியூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு பெரிய சடங்காசாரமான சபையிலே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். செய்தித்தாளில் அது வெளியிடப்பட்டிருந்தது, நான் அதைக் கத்தரித்து வைத்திருக்கிறேன். அவருடைய சபையார் எல்லாரும் அவருக்கு விரோதமாயிருந்தனர். அவர் இயற்கைக்கு மேம்பட்டவைகளிலும், நித்திய ஜீவனிலும், ஆவியின் ஞானஸ்நானமானது

தனிப்பட்ட விசுவாசிக்கு ஜீவனைக் கொடுக்கிறது என்பதிலும், மற்றும் அடையாளங்களிலும் அற்புதங்களிலும் விசுவாசம் கொண்டிருந்தார்.

18. அவருடைய சபையார் அவரை வெளியேற்ற முடிவு செய்தனர். அவர்... அவர்களிடம் குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடம் இருந்தது. அவர் இந்த சபையிலேயே நீண்ட காலம் தங்கி விடலாமா என்று தேர்ந்தெடுக்கிற ஒரு உரிமை அவருக்கிருந்தது, ஓ, அவர்கள்- அவர்கள் சும்மா அங்கு உட்கார்ந்து கொண்டு, அந்த மனிதர் பிரசங்கிப்பதைக் குறித்து சலிப்படைந்திருந்தனர். ஆனால் அவரோ தான் சரியாய் இருக்கிறார் என்பதில் திட நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவர் ஒரு நோயாளியாகவும் கூட இருந்தார், அவர் சொன்னார்... இல்லை, அவர் ஒரு நோயாளி அல்ல. உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். அவர் அப்படியே பிரசங்க பீடத்தில் இருந்தவாறே மரித்தார், ஆனால் அவர் ஒரு நோயாளி அல்ல. ஆகையால் அவர்... அவர்கள், அவர்கள் அவரை மரித்துப் போகும் அளவுக்கு துக்கப்படுத்தி விட்டிருந்தனர். ஆகையால் அவர்கள் அவர்மேல் கோபமாய் இருந்தனர், அவர் கூறுகிற எதையும் அவர்கள் கேட்கவில்லை.

அவரோ தொடர்ந்து சத்தியத்தையே பிரசங்கித்துக் கொண்டிருந்தார். மேலும் அவர்கள் கூறினார்கள்...

19. அவர்கள், அவர்கள் வெறும் ஒரு சமுதாய மார்க்கத்தைத் தான் கொண்டிருந்தனர், "ஓ, நாம் ஒன்றாகக் கூடி வந்திருக்கிறோம். இங்கேயுள்ள திருமதி. ஜோன்ஸ் அவர்கள் இதைச் சேர்ந்தவர்கள், ஆகையால் நாம் ஒன்றாகக் கூடி வருகிறோம். நமக்கு நம்முடைய சிறு தேனீர் விருந்துகளும் மற்றும் ஒவ்வொன்றுமே இருக்கின்றன" என்று கூறினார்கள். அது வெறுமனே ஒரு சமூக விவகாரமாக இருந்தது, ஆனால் அது மூடத்தனம் என்று அவர்கள் நம்பினர்.

20. "நாம் கூடி வந்து, மறுபடியும் பிறந்தாக வேண்டும்." அவர்கள் அவருடைய மார்க்கத்தைக் குறித்தும், யாவற்றைக் குறித்தும் அவரைப் பார்த்து பரிகாசம் செய்தனர், மற்றும் ஒவ்வொன்றையும் செய்தனர்.

21. ஒருநாள் காலையில், அவர் அங்கே பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு, இயேசு கிறிஸ்து உண்மையாகவே இருக்கிறார் என்று அழுதுகொண்டே பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவர் கீழே விழ ஆரம்பித்தார், அவர்

அவ்விதமாக பின்னால் நின்றிருந்தார். அவர்களில் சிலர்... அவருடைய சபையோரில் இரண்டு மருத்துவர்கள் இருந்தார்கள், எனவே அவர்கள் வந்து அவரைத் தூக்கி நிறுத்தினர். அவர்கள் அந்தக் காரியத்தை அவருடைய இருதயத்தின் மேல் வைத்துப் பார்த்து, "அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது" என்றனர். "ஐயா, நீர்-நீர்-நீர் மரித்துக் கொண்டிருக்கிறீர்" என்றனர்.

அவர், "நான் மரித்துக் கொண்டிருக்கிறேனா?" என்றார்.

அவர்கள், "ஆம்" என்றனர்.

"எனக்கு விசுவாசமுள்ள டீக்கன்மார்களில் இரண்டு பேர் இங்கே வாருங்கள்" என்றார் அவர்.

22. அவர்கள் சூழ்ந்து வந்து அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். மேலும் அவர்கள், "நீர் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் இந்தக் காரியத்தைக் குறித்து - இந்தப் புதிய மார்க்கத்தைக் குறித்து நீர் இப்பொழுது என்ன நினைக்கிறீர்" என்று கேட்டனர்.

23. அவர், "இப்பொழுது என்னை விடுங்கள்" என்றார். அவர்கள் அவரை விட்டனர். அவர் தம்முடைய கரங்களை மேலே உயர்த்தினவாறு, "கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல்

நிற்கிறேன்! மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே!" என்று கூறினார். அவர் அவ்வாறு கூறின போது, அவர் இவ்விதமாக பின்னோக்கி தள்ளாடி தடுமாறினார். அங்கே அவருக்குப் பின்னால் ஒரு சிலுவை தொங்கிக் கொண்டிருந்தது. அவர் இவ்விதமாக ஒரு கரத்தை சிலுவையின் ஒரு புறத்திலும், மறுகரத்தை மறுபுறத்திலும் போட்டுக் கொண்டு, "மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே! மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே!" என்று கூறினார்.

24. "ஓ தேவனே, அதுதான் வழி!" என்று நினைத்துக் கொண்டேன். அதுதான் அது. அதுதான் முக்கியமான விஷயம், அவர் அந்த சிலுவையின் மேலேயே மரித்துப் போனார், நீங்கள் பாருங்கள்... மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே. நமக்கிருக்கிற ஒரே நம்பிக்கை கிறிஸ்து தான். வேறெதிலும் நம்முடைய விசுவாசம் கட்டப்பட்டிருக்கவில்லை.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*